பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 08 வியாழக்கிழமை (24-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 231

## விமான சேவை இடை நிறுத்தம்!

### சிவில் நிர்வாகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டத்துக்கான பயணிகள் விமான சேவைகள் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நேற்று அறிவித்தது.

கடந்த மாதம் 14 ஆம் திகதி நிறுத்தப்பட்ட பயணிகள் விமான சேவை இன்று மீள ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த போதும், தற்சமயம் விமான சேவை மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணம் செய்வதற்கான விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் —

கப்பல், விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும் வரை பதிவுகள், முன்னுரிமை அளித்தல் ஆகிய பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் — யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-3)

## விமானிகள் வந்து சேராததே சேவை தடைப்படக் காரணம்?

கொழும்பு, ஜூலை 24

பலாலிக்கும் கொழும்புக்கும் இடையிலான பயணிகள் விமானச் சேவை இடை நிறுத்தப்பட்டதற்கு, கஸகஸ்தானில் இருந்து விமானிகள் வந்து சேருவதில் இடம் பெற்ற தாமதமே காரணம் என்று கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

அதேசமயம் கொழும்பில் இருந்து பலாலிக்கான தனியார் பயணிகள் விமான சேவை எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பிக்கும் என்று மற்றொரு தகவல் தெரிவித்தது.

28 ஆம் திகதி முதல் பயணம் செய்பவர்களுக்கான டிக்கெட்டுக்கள் நேற்று ''லயன் எயர்'' நிறுவனத்தால் வழங்கப்பட்டன என்றும் —

28 ஆம் திகதி முதல் சேவை இடம்பெறும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்குப் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக இன்னமும் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று திருகோணமலை பட்டணமும், சூழலும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## டொனாக்குழி சரக்குக் கப்பலில் பயணிகளை ஏற்றி இறக்க முடிவு

### இன்று கொழும்பிலிருந்து வருகிறது

கொழும்பு, ஜூலை 24

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் சேவையை மேற்கொள்வதற்காக ''டொனாக்குழி'' என்னும் சரக்குக் கப்பல் இன்று கொழும்பு துறைமுகத்தில் இருந்து திருகோணமலைக்கு புறப்படவிருப்பதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

முதலில் அரசாங்க ஊழியர், பல்கலைக்கழக மாணவர்களை இக் கப்பல் ஏற்றிச் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3-173-164)

## குடாநாட்டில் பொருள்களுக்கு தட்டுப்பாடு எதுவும் கிடையாது

### இராணுவ அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ். குடாநாட்டுக்குக் கொண்டுவரப்படும் அத்தியாவசியப் பொருள்களின் பட்டியலை நோக்கும்போது யாழ்ப்பாணத்தில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு கிடையாது என்பதைக் கூறவிரும்புகிறேன்.

''யாழ் மக்களுக்கு'' என்ற தலைப்பில் யாழ். குடாநாட்டின் பாதுகாப்பு நடவடிக்கையின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பீ. ஏ. கருணாதிலக்க விடுத்த பத்திரிகைக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதிக்கு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வந்த கப்பல் மீதான [illegible]

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதக்கப்பல் மர்மம் நீடிக்கிறது!

கொழும்பு, ஜூலை 24

சிம்பாப்வேயில் இருந்து இலங்கை இராணுவத்துக்கு 40 ஆயிரம் மோட்டார் ஷெல்களை ஏற்றி வந்ததாகக் கூறப்படும் கப்பல் குறித்து இன்னும் தகவல் எதுவும் கிடைக்கவில்லை'

இப்படி கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கப்பல் காணாமற்போனமை குறித்து சர்வதேசப் பொலீஸான இன்ரர் போலின் உதவிகோரப்பட்டிருந்த போதும், இன்னும் அந்த அமைப்பிடம் இருந்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இந்தக் கப்பலைக் கைப்பற்றினார்கள் என்ற தகவலை இலங்கை பாதுகாப்பு அமைச்சு உறுதி செய்யவும் இல்லை மறுக்கவும் இல்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-150)

## ஆஸி. அமைச்சருடன் தமிழ் கட்சிகள் சந்திப்பு

### இனப்பிரச்சினை குறித்துப் பேசுவர்

கொழும்பு, ஜூலை 24

நேற்று இலங்கை வந்தடைந்த ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டவ்னர் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து கொழும்பில் ஆராய உள்ளார்.

இதன் ஓர் அங்கமாக தமிழ்க் கட்சித் தலைவர்களுடன் இன்று கொழும்பில் அவர் முக்கிய பேச்சுக்களை நடத்துவார்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய கட்சிகளின் தலைவர்களுடன் நடத்தும் இப்பேச்சுக்களின் போது அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளில் அவர்களின் நிலைப்பாடு குறித்து அவர் கேட்டறிவார்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அவருக்கு தமிழ் கட்சிகள் விளக்கிக்கூறும்.

நேற்று பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோருடன் அவர் பேச்சு நடத்தினர்.

யுத்தநிலை, அரசியல் தீர்வு

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



பேசிப் பேசி தமிழ்க் கட்சிகளும் களைக்கப் போகின்றன...!

## யால சரணாலயப் பகுதியில் உள்ள குடிசைகள், மீன்பிடி படகுகள் எரிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 24

யால சரணாலயப் பகுதியில் உள்ள மீன்பிடிக் கிராமம் ஒன்றுக்குள் நுழைந்த இனந்தெரியாத குழு ஒன்று 24 மீன்பிடிப் படகுகளையும், 18 குடிசைகளையும் தீக்கிரையாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 9.15 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவம் குறித்து பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இத் தாக்குதலை விடுதலைப் புலிகளே செய்திருக்க வேண்டும் என்று யாலப் பகுதி பிரதிப் பொலீஸ் மா அதிபர் காமினி குணவர்த்தன தெரிவித்தார்.

மீன்பிடி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ இதுபற்றி கருத்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோவிலிருந்து சூரியமூர்த்தி ராஜினாமா

கொழும்பு, ஜூலை 24

திருகோணமலை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஐவர் எதிர்த்து வாக்களித்ததையடுத்து மாநகர மேயர் சூரியமூர்த்தி ரெலோவில் இருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று நடைபெற்ற சமயம் கொடுப்பனவு தொடர்பான பிரேரணை ஒன்றுக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்த 5 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர்.

இதையடுத்து மேயர் சூரியமூர்த்தி தாம் அங்கம் வகிக்கும் கட்சியான ரெலோவில் இருந்து ராஜினாமா செய்துள்ளார். (இ-3-164)

## புளியங்குளத்தில் மோதல்!

வவுனியா, ஜூலை 24

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைத் துருப்பினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் புளியங்குளத்தில் மோதல் இடம் பெற்றது.

சேதவிவரம் தெரியவரவில்லை.

இதனை அடுத்து வவுனியா நகரில் இருந்து புளியங்குளம் நோக்கி படையினரால் ஷெல் ஏவப்பட்டது. (இ-3-164)

## கோணேசர் ஆலயப் பூசகர் மற்றும் உதவியாளர் பிணையில்

திருகோணமலை, ஜூலை 24

திருகோணமலை கோணேசர் ஆலய பிரதம குருக்களின் மனைவி அம்பிகாவின் கொலை தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவரது கணவர் விசாகேஸ்வர சர்மாவும், உதவியாளரான பாலமுரளிசர்மாவும் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

திருகோணமலை நீதிவான் எஸ். சொர்ணராஜ் முன்னிலையில் அவர்கள் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம். எஸ். எம். மதார் சந்தேகநபர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமல் 3 மாத காலத்துக்கு மேல் அவர்களைத் தடுத்து வைப்பது குற்றவியல் சட்ட ஏற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## OLD GIRLS' ASSOCIATION CHUNDIKULI GIRLS' COLLEGE

A General meeting will be held on Wednesday 6th. August 1997 at 3-00 p.m. in the College Hall. All members are expected to be present.

- Secretary

(C/1183)

## புலமைப் பரிசில் '97

பரீட்சைக்குத் தோற்ற இருக்கும்
மாணவர்களுக்காக - பயிற்சி
வினாத்தாள்களுக்கு - விளக்க வகுப்பு
ஆரம்பம்:- 25-07-97 பி.ப 4.00 மணி

**BOND INSTITUTES**

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (48555)

## 9 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்: 23 — 03 — 1939

விண்ணில் 24 — 07 — 1988

### அமரர் கந்தையா கனகரட்ணம்

(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி)

ஒவ்வொரு கணமும் உங்கள் நினைவுமாய்
ஒன்பது ஆண்டுகள் உருண்டதையா!
எங்களின் துயரம் ஆற்றிட வழியில்லை
இதயம் உருகிட அஞ்சலி செய்தோம்.

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

56, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

(48549)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் அப்பையா ஜெயராசா

புவியரங்கப் பிரவேசம்: 08–08 1958

விண்ணரங்கப் பிரவேசம்: 14–06–1997

எமது கழக அங்கத்தவரும், யாழ். நவீன சந்தை பிரபல பழக்கடை வணிகருமாகிய அமரர் அப்பையா ஜெயராசா அவர்களின் ஆத்ம சாந்திக்காக எமது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினருக்கும், சக வணிகர்களுக்கும் யாழ். வணிகர் கழகம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

- யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

(சி/1179)

## சமய நிகழ்வுகளில்

அராலி கிழக்கு மலையாளம்பதி ஸ்ரீபூரை புஷ்கலா. சமேத அரிகர புத்திர சுவாமி ஆலய சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

பகல் சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் மாலை திருக்கல்யாணமும் திருவூஞ்சலும் நடைபெற்று சுவாமி பூந்தண்டிகையில் திருவுலா வருவார். (ஐ-4)

★ ★ ★

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் தேவாலய நவநாள் உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை பி. ப. 4. 15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 4. 00 மணிக்கு திருநற்கருணை ஆராதனையும், திருப்பலிபூசையும் இடம்பெற்று ஞாயிற்றுக்கிழமை காலை 7. 00 மணிக்கு திருநாட்பாடற்பரிபூசையும் திருச்சொருப பவனியும் இடம்பெறும்.

நவநாள் ஆராதனைகளை பங்குத் தந்தை அருட்திரு. பற்றிக் ஞானப்பிரகாசம் நடத்துவார். (ஐ-117)

★ ★ ★

இமையாணன் பெரியதம்பிரான் ஆலய இராஜேஸ்வரி அம்பாளின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். ஒன்பதாம் நாள் சித்திரத் தேர்த் திருவிழா இடம்பெறும். (ஐ-5)

★ ★ ★

கொழும்புத்துறை. பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் ஆலய வருடாந்த திருவிழாவின் 7 ஆம் நாளான இன்று மாலை 5–30 மணிக்கு ''அன்பியம் என்பது தூதுரைக் குழுமம்'' என்னும் தலைப்பில் ஆலயபங்குத் தந்தை அருட்திரு ம. வி. இ. ரவிச்சந்திரன் உரையாற்றுவார். (ஐ-30)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10. 30 மணிக்கு கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலய மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (ஐ-4)

### மருந்து விநியோகம்

சங்கானை, வட்டுக்கோட்டை, தொல்புரம், மானிப்பாய், பண்டத்தரிப்பு ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு இவ்வருட மூன்றாம் கந்தாயத்திற்கான மருந்து வகைகள் யாழ். சுகாதார திணைக்கள மாவட்ட மருந்து களஞ்சிய பிரிவினரால் நாளை வெள்ளிக்கிழமையன்று நேரடியாகக் கொண்டு சென்று விநியோகம் செய்யப்படவுள்ளன. (ஐ-135)

## நிரு

கோண்டாவில்

**ORGANIC CHEMISTRY**

A. மகாதேவன்

ஆரம்பம்: 25-07-1997
திங்கள், வெள்ளி

(48547)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழகப் புவியியற் சிறப்புக் கலை இறுதிவருட மாணவி

க. பிரேமளாவின் தந்தையார்

### கு.கனகசபை அவர்களின்

மறைவையிட்டு துயருறும் அவர்களின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

புவியியற் கழகம்,
புவியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(48550)

## அறிவித்தல்

### இந்துமத குருமார் ஒன்றியம்

யாழ்ப்பாணம்

குருமாருக்கு அரசாங்க அனுமதியுடன் வழங்கப்படும் அடையாள அட்டை படிவங்களுக்கு வர்ணப்படம் எடுப்பதற்கு இந்துமத குருமார் ஒன்றியம் பின்வரும் தினங்களில், குறிப்பிட்ட இடங்களில் படம் எடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. தவறாது சமுகம் கொடுக்கும்படி வேண்டுகின்றோம்.

25-07-1997 வெள்ளிக்கிழமை
கதிரேசன் கோயில், யாழ்ப்பாணம்.
நேரம்:- 8.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை

26-07-1997 சனிக்கிழமை
மாலுசந்தி பிள்ளையார் கோயில், பருத்தித்துறை.
நேரம்:- 9.00 மணி தொடக்கம் 3.00 மணி வரை

27-07-1997 ஞாயிற்றுக்கிழமை
சிவன் கோயில், சாவகச்சேரி
நேரம்:- 8.30 மணி தொடக்கம் 4.00 மணி வரை

28-07-1997 திங்கட்கிழமை
தர்ம ஸாஸ்தா குருகுலம், இணுவில்.
நேரம்:- 8.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை


30-07-1997 புதன்கிழமை
இலுப்பத்தாள் முருகமூர்த்தி கோயில், சங்கானை.
நேரம்:- 9.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை

**புகைப்படச் செலவு 40/-**

கா. சந்திரசேகர சர்மா
செயலாளர்.

(48552)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### செல்லப்பா இராசலிங்கம்

(இளைப்பாறிய அதிபர்)

மலர்வு: 11 - 01 - 1936

உதிர்வு: 24 - 06 - 1997

அன்பிற்கு இலக்கணமாய்
பண்பின் உறைவிடமாய்
பாசமெனும் நீருற்றி
எமை அரவணைத்த தெய்வமே!
மாதமொன்று சென்றாலும்
அகலாது உங்கள் நினைவு
வற்றாத கண்ணீருடன்
நாம் இங்கு வாழ்கின்றோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

346, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(48551)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரப்பனுடன் 'நக்கீரன்' ஆசிரியர் காட்டுக்குள் பல மணி நேரம் பேச்சு!

## அவரை எதிர்பார்த்து செய்தியாளர் காத்திருப்பு

சென்னை, ஜூலை 24

பிரபல சந்தனமரக் கடத்தல் பேர்வழி வீரப்பன் சரணடைவது தொடர்பாக அவருடன் பேச்சு நடத்தச் சென்ற தமிழக அரசின் பிரதிநிதியும் 'நக்கீரன்' சஞ்சிகையின் ஆசிரியருமான கோபாலிடம் இருந்து தகவல்களை எதிர்பார்த்துக் காத்திருப்பதாக தமிழக முதல்வர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டுக்கும், கர்நாடகாவுக்கும் இடையே உள்ள காட்டுப் பகுதியில் வீரப்பனின் மறைவிடத்துக்குச் சென்றுள்ள 'நக்கீரன்' ஆசிரியர் வீரப்பனுடன் 10 மணி நேரம் பேச்சு நடத்தியதாக உள்ளூர்ச் செய்திகள் தெரிவித்தன.

பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு திரும்பிவரும் கோபாலை சந்திப்பதற்காக பெரும் எண்ணிக்கையான செய்தியாளர்களும், புகைப்படப் பிடிப்பாளர்களும் காட்டின் எல்லைப் பகுதியில் காத்திருக்கிறார்கள்.

வீரப்பனின் கோரிக்கைப்படி அவர் மீதான வழக்குகளை தமிழ் நாட்டுக்கு மாற்றிட கர்நாடக அரசு இணங்கியுள்ளது.

காட்டுப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த தமிழக, கர்நாடக மாநிலங்களின் கூட்டு பொலீஸ் அதிரடிப்படையினர் அங்கிருந்து வாபஸ் பெறப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து வீரப்பனின் சகாக்கள் அந்தியூர் சந்தைக்கு வந்து பொருள்களை வாங்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

(ஐ)

# "பாத் பைண்டரி"ல் சிறு கோளாறு

கலிபோர்னியா, ஜூலை 24

செவ்வாயில் தரையிறக்கப்பட்டு உள்ள "பாத் பைண்டரில்" கடந்த சில நாள்களுக்கு முன்னர் இயந்திரக் கோளாறு ஏற்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த இயந்திரக் கோளாறை நிவர்த்தி செய்வதில் நாஸா விஞ்ஞானிகள் முயற்சித்து வருகின்றனர்.

கலிபோர்னியா, ஸ்பெயின் மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள நாஸாவின் கணனி, வானலைத்தொடர்புகளுக்கு சம்பந்தம் இல்லாத- செவ்வாய்த் தரையிலுள்ள சில துல்லிய பொருள்களால்- பாத்பைண்டரில் கோளாறு ஏற்பட்டது என்று விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

நீண்ட முயற்சியின் பின்னர் கடந்த திங்கட்கிழமை பாத்பைண்டரில் இருந்து சில தகவல்கள் தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துக்கு கிடைத்தன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-5)

# ஆற்றுக்குள் பஸ்! 80 பயணிகள் பலி!

## பீஹாரில் சம்பவம்

புதுடில்லி, ஜூலை 24

பீஹார் மாநிலத்தில் ஜிமிலே மாவட்டத்தில் உள்ள ஆறு ஒன்றினுள் பஸ் ஒன்று வீழ்ந்ததில் குறைந்தது 80 பேர் வரை இறந்திருக்கலாம் என அஞ்சப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அளவுக்கு அதிகமாக பஸ்ஸில் பயணிகள் திணிக்கப்பட்டிருந்தனர் என்று கூறப்படுகின்றது.

தர்பார் பாலத்தின் கம்பி வேலிகளை முறித்துக் கொண்டு பஸ் ஆற்றினுள் விழுந்ததனாலேயே இப் பேரழிவு நிகழ்ந்ததாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

கிரீடியிலிருந்து அந்த பஸ் துன்கா நோக்கி சென்று கொண்டிருந்தது. தொடர்ந்து பெய்த கடும் மழையால் அந்த ஆற்றில் வெள்ளம்பொங்கிப் பீறிட்டுக் கொண்டிருப்பதால் உதவிமீட்புப்பணிக்கான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஆற்றில் விழுந்த பஸ் நீண்ட தூரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

இந்த துயர சம்பவம் குறித்து பிரதமர் ஐ. கே. குஜ்ரால் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

(ஐ-5)

# தலிபானுக்கு எதிரான படைகள் காபூல் நோக்கி முன்னேறுகின்றன?

காபூல், ஜூலை 24

ஆப்கானிஸ்தானில் தலைநகர் காபூலுக்கு வடக்கே உள்ள ஹறபாக் என்னும் இடத்தில் தலிபான் படையினருக்கும் எதிரணிப்படையினருக்கும் இடையே பல மணிநேரமாகத் தொடர்ந்து கடும் சண்டை நடைபெற்றுள்ளது.

சண்டையில் தாம்முன்னேற்றம் கண்டிருப்பதாக தலிபானுக்கு எதிரான படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் சண்டை நடைபெறும் பகுதிக்கு செய்தியாளர்கள் செல்ல தலிபான் இயக்கம் அனுமதி வழங்காததால் சண்டை குறித்த பக்கச்சார்பற்ற செய்திகள் வெளியாவது தடைப்பட்டுள்ளது.

ஹறபாக் பகுதியில் இருந்து நூற்றுக் கணக்கான மக்கள் தெற்கே காபூல் நகரை நோக்கி வெளியேறிச் சென்றுகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகரை அண்டிய பகுதிகளை நோக்கி சண்டைகள் தீவிரமடைந்து வருவதால் காபூலில் உள்ள வெளிநாட்டு தொண்டு நிறுவனங்கள் தங்கள் ஆளணியினரின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளன.

(ஐ)

# இரண்டாம் உலகப்போர் காலப்பகுதியில் சுவிஸ் வங்கிகளில் கணக்கு வைத்திருந்த 2ஆயிரம்பேரின் விவரங்களை வெளியிடமுடிவு

ஜெனீவா, ஜூலை 24

இரண்டாம் உலகப் போர் நடந்த காலத்தில் கணக்குகளை வைத்திருந்தவர்களில் சுமார் 2 ஆயிரம் பேரின் பெயர் விவரங்களை சுவிஸ் வங்கிகள் சர்வதேச ரீதியில் விளம்பரப்படுத்தியுள்ளன.

வங்கிகளில் கணக்குகளை வைத்திருந்தவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் நோக்குடன் உலகளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட செய்தித் தாள்களிலும், இன்ரர்நெற் மூலமும் அவர்களது பெயர் விவரங்கள் வெளியிடப்படுகின்றன.

இரண்டாம் உலகப் போரில் இறந்துபோனவர்களின் சொத்துக்கள் மூலம் சுவிஸ் வங்கிகள் பெரும் ஆதாயம் பெற்று வருவதாக எழுப்பப்பட்டு வந்த பரவலான குற்றச் சாட்டுக்களை அடுத்து வங்கிகள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளன.

நாஸி காலம் முதல் பயன்படுத்தப்படாமல் முடங்கிக் கிடக்கும் வங்கிக் கணக்குகளின் உரிமையாளர்களது பெயர் விவரங்கள் பட்டியலிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

உலகப்போர் காலத்தில் வங்கிக் கணக்குகளை வைத்திருந்தோரில் உயிர் பிழைத்து எஞ்சியுள்ளோரும், அவரது வாரிசுகளும் சம்பந்தப்பட்ட கணக்கில் உள்ள பணத்தை - சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வங்கிகள் அழைப்பு விடுத்துள்ளன.

நாஸிகளினால் நடத்தப்பட்ட படுகொலைகளுக்கு இரையாகியோர் சுவிஸ் வங்கிகளில் சேமித்து வைத்திருந்த சொத்துக்கள் தொடர்பாகவும்—

இரண்டாம் உலகப் போர் காலத்தில் நாஸிக்களால் கொள்ளையடிக்கப்பட்டு பின்னர் சுவிஸ் வங்கிகளால் வாங்கப்பட்டதாகக் கூறப்படும் தங்கம் (தொடர்பாகவும் யூத அமைப்புகளின் தலைமையில் கடந்த இரு ஆண்டு காலமாக சர்வதேச ரீதியில் பிரசாரங்கள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஐ)

# காஷ்மீர் சபாநாயகர் தப்பினார்

புதுடில்லி, ஜூலை 24

காஷ்மீர் மாநில சட்டசபை சபாநாயகர் அலி மொஹமட் நாயக் பயணம் செய்து கொண்டிருந்த வாகனம் கடந்த திங்களன்று குண்டுத்தாக்குதலில் இருந்து அதிர்ஷ்டவசமாகத் தப்பியது. பின்னால் சென்று கொண்டிருந்த வாகனம் கண்ணியில் சிக்கியதில் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் மூவர் பலியாகினர். (ஐ)

# உலக அரங்கில்

# மீனவர் தாக்கப்படுவது குறித்து குஜ்ராலுடன் கருணாநிதி பேசுவார்

சென்னை, ஜூலை 24

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்துப் பிரதமர் குஜ்ராலிடம் பேசப் போவதாக தமிழக முதலமைச்சர் கருணாநிதி நேற்று தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சுடப்படுவது குறித்து நேற்று சென்னையில் செய்தியாளர்கள் கேட்டதற்கு மேற்கண்டவாறு கருணாநிதி பதிலளித்தார்.

தாம் புதுடில்லி செல்லும் போது பிரதமரிடம் இது பற்றிப் பேசவிருப்பதாகக் கருணாநிதி கூறினார்.

இது குறித்து இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை என்றும் கருணாநிதி குற்றஞ் சாட்டினார். (இ-4)

# பாரிஸ் அருங்காட்சி இல்லத்தில் தீ!

பாரிஸ், ஜூலை 24

பாரிஸ் நகரில் உள்ள அருங்காட்சியகத்தில் நேற்று முன்தினம் பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான தீயணைப்புப் படை வீரர்கள் தீயை அணைக்கப் பெரும் போராட்டம் நடத்தினர்.

முதலில் கூரைப் பகுதியில் பற்றிய தீ சுமார் 4 ஆயிரம் சதுர மீற்றர் பகுதிக்கு பரவியது.

மனிதகுல வரலாற்றை எடுத்துக் காட்டும் அரிய பல பொருள்கள் இந்த அருங்காட்சியகத்தில் இருந்தன.

ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க நாடுகளில் இருந்து கொண்டு செல்லப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த இந்தப் பொருள்களுக்கு சேதம் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

(ஐ-5)

# 27 தடவைகள் தேர்தலில் போட்டியிட்ட இந்திய டாக்டர்!

சென்னை, ஜூலை 24

தமிழ் நாட்டைச் சேர்ந்த சேலம் மாவட்டத்தில் வசிக்கும் டாக்டர் பத்மராஜன் இந்திய உப ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுவை நேற்று முன்தினம் தாக்கல் செய்தார்.

உப ஜனாதிபதித் தேர்தலுக்காக இதுவரை 16 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

முக்கிய பிரமுகர்களை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிடுவதை வழக்கமாகக் கொண்டவர் இவர். இதுவரை 27 முறை தேர்தலில் போட்டியிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில்.

அப்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதாவை எதிர்த்து பர்கூரிலும் லோக் சபைத் தேர்தலில் அப்போதைய பிரதமர் நரசிம்மராவை எதிர்த்து நந்தியால் தொகுதியிலும் பத்மராஜன் போட்டியிட்டிருந்தார்.

(ஐ-10)

# ஜேர்மனியில் வெள்ளம்; மக்கள் வெளியேற்றம்!

பிராங்பேட், ஜூலை 24

தொடர்ந்து பெய்த கடும் மழையினால் ஜேர்மனியில் சில பகுதிகளில் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள பல கிராமங்களிலேயே வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. முதல் முறையாக சுமார் 200 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

ஜேர்மன்பிரதமர் ஹெல்மட் ஹோல்பாதிக்கப்பட்டுள்ள இடங்களை நேரில் சென்று பார்த்தார்.

இதேவேளை போலந்திலும்வெள்ள நிலை தொடர்ந்து மோசமாகி வருகிறது. இதுவரை 60 பேர் உயிரிழந்துள்ளனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### அறை வாடகைக்கு

யாழ். பகுதியில் அறை (UNIT) வாடகைக்கு உண்டு; வாடகை 300/- ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், (வண்ணை சிவன் சந்தி). [48525]

### ஆங்கிலம் (விசேடமாக)

இருமாதங்களில் இலகுவாகப் பேச, வாசிக்க, எழுத வெளிநாடு செல்பவருக்கும், O/L பரீட்சையில் விசேட பெறுபேறடையவும் கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (48500)

### திருத்துதல்

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: R மருதம். 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். (48263)

### திருமணசேவை

எம்மிடம் சகல உத்தியோகத்திலும், சகல மதத்திலும் ஆண், பெண் இருபாலாரும் உண்டு. தொடர்பு: தர்க்கா திருமணசேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [48537]

### காணவில்லை

நெற்றியில் கறுப்புநிற சுட்டியுடைய Brown நிற பொமேரியன் நாயை 7-7-97 தொடக்கம் காணவில்லை. கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும்: 18A சீனியர், லேன், யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். [48531]

## 18 பேருக்கு சைக்கிள்கள்

''யுனிசெவ்'' நிறுவனம் யாழ். சுகாதார பிராந்தியத்தில் கடைமையாற்றும் 18 வெளிக்கள குடும்ப நலசேவை உத்தியோகத்தர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளது. கடந்த திங்கட்கிழமையன்று யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் வைத்து இந்த துவிச்சக்கர வண்டிகள் கையளிக்கப்பட்டுள்ளன.

(ஐ-135)

## பனாட்டு விற்பனை

தென்மராட்சி, ஜூலை 24 பனம் பழ சீஸன் ஆரம்பித்துள்ளதால் பனாட்டு சந்தைக்கு விற்பனைக்கு வரத் தொடங்கியுள்ளது;

ஒரு சோடி பனாட்டு பத்து ரூபாவாக விற்கப்படுகிறது.

(ஐ-117)

## வைத்தியம்

செங்கமாரி, அல்சர், ஆஸ்துமா, வாத நோய்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சருமநோய்கள், மாத விடாய்க்குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப் பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூல வியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை

வைத்திய கலாநிதி

**சி. இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(48310)

---

குரும்பசிட்டி
வளர்மதி சன சமூக நிலையம்

# பிரார்த்தனையும் ஆலயக்குருமார் கௌரவிப்பும்


எமது நிலையத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் மேற்படி நிகழ்வுகளை இவ்வாண்டும் செயற்படுத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. எமது கிராமத்து ஆலயங்களின் நினைவாகவும், ஆலயக் குருமார் கௌரவிப்பு, மற்றும் இடம்பெயர்ந்து அல்லலுறும் எமது கிராம மக்களின் நலன் நாடிடும் பிரார்த்தனை நிகழ்வுகளுக்காகவும் நிதி மற்றும் ஒத்துழைப்புக்களை நல்க விரும்புவோர் நிலைய நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

திரு. அ. சக்திவேல், தலைவர்,
திரு. து. கலியுகவரதன், செயலாளர்.

(48540)

---

# 2 ஆம் ஆண்டு நினைவில்



தோற்றம்: 25 — 09 — 1957

மறைவு: 24 — 07 — 1995

## செல்வி தம்பிநாயகம் விமலா

(Accounts clerk, Mc Leod Hospital, Inuvll)


'' உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக் கொள்வீர் '' (சங்கீதம்: 73:24).

— குடும்பத்தினர்

நவாலி தெற்கு,
மானிப்பாய். (48498)

---

# 41 ஆம் நாள் நினைவஞ்சலி



## அப்பையா ஜெயராசா

அன்னை மடியில்: 08 — 08 — 1958

அநியாய அழிப்பில்: 14 — 06 — 1997

அப்பையா அன்னப்பிள்ளையின் மூத்த மகனே
ஆறு சகோதரிகளின் மூத்தவனே
நான்கு பிள்ளைகளின் தந்தையே
இயமனின் பிடியில் சிக்கினாயோ!
ஊரெல்லாம் புகழ் ஓங்கும் உத்தமனாய்
ஏழையைக் கண்டவுடன் இரங்கும் உன் இதயம்
இன்ப துன்பத்தில் பங்கெடுக்கும் தெய்வமே
என்று எம்மை மறந்து சென்றது ஏனோ?

பிரிவால் வாடும்!
தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரிகள் மற்றும் உறவினர்கள்.

7/1. அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம். (48527)

---

# வாழ்த்துகிறோம்

கடந்த $34\frac{1}{2}$ ஆண்டுகள் கிராம சேவை அலுவலராக கடமையாற்றி 23 — 07 — 97 இல் ஓய்வு பெறும்

## திரு. செல்லையா வேதராசா

(கிராம சேவை அலுவலர், மானிப்பாய் தெற்கு)

அவர்களை

சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தும்

மானிப்பாய் கோயிற்பற்று இந்து சமய விருத்திச் சங்கம்,
மானிப்பாய்.

(48539)

---

# 14 ஆம் ஆண்டு நினைவலைகள்





| எஸ்.சரவணமுத்து | எஸ்.கலாபரமேஸ்வரன் |
|---|---|
| B. A, (LOND.) | (M. A. (CEY.) |
| தோற்றம்: 19-04-1901 | தோற்றம்: 02-08-1944 |
| மறைவு: 24-07-1983 | மறைவு: 24-07-1983 |

திதி: 19-07-1997

என்றும் தங்கள் நினைவுடன்

குடும்பத்தினர்

'இலக்குமிபதி'
பலாலிவீதி,
திருநெல்வேலி. (48544)

---

# ஓராண்டு நீங்கா நினைவுகள்



தோற்றம்: 02 — 02 — 1935

மறைவு: 03 — 08 — 1996

## அமரர் சூரியர் சிதம்பரப்பிள்ளை

(இளைப்பாறிய C. T. B பயணச் சீட்டு பரிசோதகர்)

**திதி - 24. 07. 1997**

பெற்றோரைச் சிறுவயதில் இழந்த நீங்கள்
பற்றுடனே தங்கையைப் பேணி வாழ்ந்தீர்
பக்தியுடன் மனையாளாய் செல்லம்மாவை
பற்றியே வாழ்ந்து தவப்பயனாய்
மோகன், மதன், வதனி, வசந்தன் என்னும்
பிள்ளைகளைப் பெற்றெடுத்தீர் ஐயா நீங்கள்
கோயிற் கடவையான் அருளால் விரதியாய்க்
கலையூட்டி நால்வரையும் வாழ வைத்தீர்;
பண்பான மருமக்களைத் தேர்ந்தெடுத்தீர்
மூத்தவரின் மழலைகளைப் படத்தில் பார்த்தீர்
இளையவரின் திருமணத்தைக் காணவில்லை
மகளாரின் மதலையினைத் தோளில் போடாது
வசந்தனின் மணக்கோலம் காணாது நீத்த
நிசமற்ற பொருளாக மறைந்ததென்ன?
படத்திற்கு விளக்கேற்ற வைத்தீரோ ஐயா!

நின் பிரிவு தாங்காது துயருறும்!
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சங்க வீதி,
துன்னாலை,
கரவெட்டி. (சி-1161)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் பொதுநூலகம்.

# கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அதிபர் சுப்பிரமணியம் லோகதாசன் அவர்களின் சேவை நிறைவுச் சிறப்புமலர்

24-07-1997

## ஆளுமை மிக்க அதிபர்

சு. லோகதாசன் அதிபர் அவர்களின் பிரியாவிடை தினத்தில் எனது வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் மகிழ்ச்சியடைகிறேன். சு. லோகதாசன் அவர்கள் ஆசிரியராகவும், அதிபராகவும் பல்லாண்டு காலம் சேவையாற்றியுள்ளார், கொக்குவில் இந்துக் கல்லூரியில் நாம் இருவரும் ஆசிரியர்களாகப் பணியாற்றிய காலத்தில் அவரின் ஆளுமையையும், நற்பண்பையும் நான் நன்கு அவதானித்துள்ளேன். பரஞ்சோதி வித்தியாசாலை அவருடைய தலைமைத்துவத்தில் பல்துறைகளிலும் முன்னேறி வந்துள்ளது. கடந்த பதினேழு ஆண்டுகளாக இவ்வித்தியாலயத்தில் அதிபராக ஆற்றிய பணிகளை - பதித்த முத்திரைகளை – இப்பாடசாலையைத் தரிசிக்கும் பொழுது யான் காணக் கூடியதாக இருந்தது. பாடசாலைப்பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் கல்வியுலகிற்கு அவருடைய பயனுள்ள பணி தொடரவேண்டுமென்று விரும்புகிறேன்.

சு. இரத்தினராசா,
கல்விப்பணிப்பாளர்,
வலயம் -1

## புதிய அதிபரின் செய்தி



பண்புடைய அதிபரான திரு. சு. லோகதாசன் அவர்கள் ஆளுமை, நேர்மைசெயல்திறன் வாய்ந்தவர். இவரின் சேவை ஓய்வு பாடசாலைக்கு ஓர் இழப்பாகும். ஓய்வில் மகிழ்வாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சு. சண்முககுமார்
(SC. Trd., B. A S. L. P. S. iii)
புதிய அதிபர்.

## விடுமுறை மறந்தவர்


கல்விப் புலத்தின் ஆசிரியராகவும், அதிபராகவும் பல்லாண்டு பணி செய்து இன்று ஓய்வு பெறும் திரு. சுப்பிரமணியம் லோகதாசன் அவர்களைப்பாராட்டி வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம்.

கடந்த 17 ஆண்டுகளாக கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் எமக்கு அதிபராக இருந்து தாய் போல் ஆசிரியர்களையும், மாணவர்களையும் தனது அன்பால் அரவணைத்தவர்; விடுமுறை மறந்தவர்; எந்நேரமும் பாடசாலையின் சிந்தனை உடையவர்.

''தவம் செய்வார் தம் கருமம் செய்வார்'' என்கின்ற பொய்யா மொழிக்கேற்ப கடமை தவறாதவர். எமது வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் ஆசிரியர்களை ஊக்குவித்து மாணவர்களின் கல்வி, விளையாட்டு மற்றும் பிற துறைகளிலும் சாதனை படைக்கக்காரணமானவர். பாடசாலை வளவை சோலையாக்கி கோண்டாவிலிலும் ஒரு ''சாந்தி நிகேதனை'' உருவாக்கியவர்.

கல்விப் பகுதியினரால் சிறந்த அதிபர் எனச்சான்றிதழ் பெற்றவர். அவரும் அவர் குடும்பத்தவர்களும் பல்லாண்டு காலம் சீருஞ் சிறப்பும் பெற்று உடல் நலத்துடன் வாழவும், அவரது சமூகப் பணிகள் தொடரவும் மனமார வாழ்த்துகிறோம்.

சி. கதிரவேலு,
தலைவர்
ஆசிரிய நலன் புரிச்சங்கம்,
கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.



## சுப்பிரமணியம் லோகதாசன்
### வரலாற்றுச் சுருக்கம்

- ★ பெற்றோர்: செ. சுப்பிரமணியம், சு. தங்கம்மா
- ★ பிறந்த திகதி: 25 – 07 - 1937
- ★ பிறந்த இடம்: உயரப்புலம் ஆனைக்கோட்டை
- ★ ஆரம்பக்கல்வி: உயரப்புலம், றோமன் கத்தோலிக்க பாடசாலை.
- ☆ உயர்கல்வி: மானிப்பாய் இந்துக்கல்லூரி

### ஆசிரிய சேவை விவரம் 1961 - 1974

- ★ யாழ்/ உயரப்புலம் அரசினர் த. க. பாடசாலை (குணபாலன் வித்தி.)
- ★ க/ உடிஸ் பத்துவ அரசினர் த. க. பாடசாலை
- ★ நு/ இராகலை மகாவித்தியாலயம்
- ★ நு/ கக்கலை அ. சி. த. க. பா.
- ★ யா/ ஆசிரிய கலாசாலை நல்லூர்,
- ★ க/ அட்டபாகை றோ. க.
- ★ கொ/ மருதானை மெதடிஸ் த. க. பா.
- ★ கி/ பற்றிமா றோ. க.
- ★ கி/ பரந்தன் இந்து தமிழ் க. பாடசாலை
- ★ யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

### அதிபர் சேவை 1975 - 1997

- ★ வ/ காதலியார் சம்மளம்குளம் அ. த.
- ★ யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை.

## 17 ஆண்டு பொற்காலம்

பரஞ்சோதி வித்தியாலயத்தில் அதிபராக சு. லோகதாசன் அவர்கள் கடமையாற்றிய 17 வருடங்களும் இப்பாடசாலையின் பொற்காலமெனக் கூறலாம். இக்காலத்தில் பலதுறைகளிலும் பாடசாலை விருத்தியடைந்தது. பல சவால்களை அவர் எதிர் கொண்டார்; வெற்றிகளும் கண்டார். இதில் முக்கியமாக நான் கருதுவது பாடசாலை — சமூக உறவு. மிகவும் மோசமான நிலையில் காணப்பட்ட இந்த உறவு இன்று உன்னத நிலையினை அடைந்துள்ளதெனில் இது ஒரு சாதாரண சாதனையல்ல; எல்லா அதிபர்களினாலும் சாதிக்கக் கூடியதுமல்ல; இதுமட்டுமல்ல பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரிடம் உற்சாகமும் விழிப்புணர்வும், ஒற்றுமையும் ''எமது பாடசாலை'' என்ற புத்துணர்வும் தற்பொழுது காணப்படுகின்றது. வறண்டிருந்த இப்பாடசாலை இன்று சோலையாகக் காட்சிதருகி

(6 ஆம் பக்கம் பார்க்க)

அ. பஞ்சலிங்கம்
முன்னாள் அதிபர்
கொக்குவில் இந்துக்கல்லூரி,
யாழ். இந்துக்கல்லூரி

## அஞ்சாத நெஞ்சினர்

ஒன்றரை தசாப்த காலங்களுக்கு மேலாக அதிபராயிருந்து அரும்பணி ஆற்றிய திரு. சுப்பிரமணியம் லோகதாசன் அவர்களின் சேவைநலம் பாராட்டு விழாவை ஒட்டி வெளியிடும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்று அனுப்புவதில் பெருமிதம் அடைகிறோம்.

இவர் எமது வித்தியாசாலையின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது உழைத்த அருந்தகை; பாடசாலை வளவை பழமரங்கள் நிறைந்த பசுஞ்சோலையாக்கியவர்; ஆசிரியப் பணியை ஆண்டவன் பணியென ஆசிரியர்களைச் சிந்தித்து செயலாற்றத் தூண்டியவர். வளரும் ஆசிரியர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்துதவிய உத்தமர்; மாணவர்களை நன்நெறிப்படுத்தி அவர்களது கல்வி வளர்ச்சிக்கு வித்திட்ட வித்தகர். பல நெருக்கடிகளுக்கும், நெருக்குதல்களுக்கும் அஞ்சா நெஞ்சத்துடனும், துணிவுடனும் முகங் கொடுத்த செயல் வீரர். எனவேஇவர் அதிபராக இருந்த காலத்தை ''பாடசாலையின் பொற்காலம்'' என அழைக்கலாம்.

தமது சேவையில் இருந்து ஓய்வு பெறும் இக் குணசீலர் எதிர் காலத்திலும் சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சபை,
யாழ். கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.

## செயல் திறன் மிக்கவர்

எனது நீண்டகால நண்பரும், பரஞ்சோதி வித்தியாசாலை அதிபருமான திரு சு. லோகதாசன் அவர்களின் சேவை நலம் பாராட்டு மலருக்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அவர் இவ்வித்தியாசாலையில் அதிபராயிருந்து செய்த அளப்பரிய சேவையை கோண்டாவிலில் ஒவ்வொருவீடும் நன்கறியும். நான் கொத்தணி அதிபராயிருந்த காலை அவர் என்னோடு பல வழிகளிலும் உதவியும், ஒத்துழைப்பும் நல்கி எனது வேலைப் பளுவைக் குறைத்தார். இவர் நெஞ்சுறுதியும், நேர்மையும், விளையாட்டுத் துறையில் ஈடுபாடுங் கொண்ட அதிபர்கள் சிலருள் ஒருவர்.

இவரின் எதிர்கால வாழ்வு ஏற்றம் பெற இறைவனின் இன்னருளை வேண்டி நிற்கிறேன்.

வ. தானையா,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
(யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை — ஊர்காவற்றுறை)

## மணி விழா நாயகர்

மதிப்பும் மதிநுட்பமுமுள்ள திரு. சுப்பிரமணியம் லோகதாசன் அவர்கள் இன்று அகவை அறுபதை எய்துகிறார். பரஞ்சோதி வித்தியாலயத்தில் பணியாற்றிய அதிபர் வரிசையில் நீண்டகாலம் பதவி வகித்த பெருமை இவரைச்சாரும்.

இவர் பரஞ்சோதி வித்தியாலயத்தில் ஆற்றிய அளப்பரிய பணியை விமர்சிப்பது பாகுடன் காய்ச்சிய பசும் பாலை நறுஞ் சுவை மிக்கது எனச்சொல்வது போலாகும். எல்லா ஆசிரியர்களையும் தனது நேசக்கரத்தால் அரவணைத்தார். உற்சாகம் கொடுத்து ஊக்குவித்தார். இன்று நான் உதவி அதிபராக இருந்து முனைப்பாகச் செயற்பட உதவுவது அவரின் வழிகாட்டலேயாகும். இவர் பாடசாலையைக் கட்டியாண்ட பாங்கு விதானையாரான இவரது தந்தை ஆனைக்கோட்டையைக் கட்டியாண்டதை ஒக்கும்.

இன்று மணிவிழாக்காணும் லோகர் பவளவிழா, போன்ற இன்னும் பல விழாக்களை காணவேண்டும் என வாழ்த்துகிறேன்.

த சொக்கலிங்கம்,
உதவி அதிபர்


| | | | | |
|---|---|---|---|---|
| பிள்ளையார் ட்ரான்ஸ்போட் கோண்டாவில் சந்தி. | பரஞ்சோதி மோட்டார் விற்பனை நிலையம் கோண்டாவில். | யாழ்ரன் தொழில்நுட்ப நிறுவனம் யாழ்ப்பாணம். | இராசமணி களஞ்சியம் கோண்டாவில். | ஐங்கரன் புடைவையகம் கோண்டாவில். |
| முத்தொளி வீடியோ கோண்டாவில். | பாலா வீடியோ கோண்டாவில். | புலவர் வீடியோ கோண்டாவில். | சிவா பிறதர்ஸ் கோண்டாவில். | கங்கா போட்டோ கோண்டாவில். |
| மத்திய கி. மு. சங்கம் கோண்டாவில். | சுதா களஞ்சியம் கோண்டாவில். | இலட்சுமி பவான் கோண்டாவில். | இளைஞர் ச. ச நிலையம் கோண்டாவில். | வாகீஸ்வரி இளைஞர் ச. ச. நிலையம் கோண்டாவில். |
| | சோதி ஸ்ரோர்ஸ் கோண்டாவில். | [illegible] கோண்டாவில். | கலைவாணி ச. ச. நிலையம் கோண்டாவில். | |

(சி-1164)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடு செல்லவிருந்த சமயம்

# கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கடந்தமாதம் மட்டும் 80 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 24

வெளிநாடு செல்வதற்கு ஆயத்தமாக கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் சென்ற 80 தமிழ் இளைஞர் யுவதிகள் கடந்த மாதம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரிப்பதற்காகச் செல்பவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலானோர் கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குப் பயணமாகவிருந்தவர்களாவர்.

இவர்களில் 26 பேரைத் தவிர ஏனையோர் பின்னர் விடுவிக்கப்பட்டனர். எஞ்சிய 26 பேரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் நேற்று முன்தினம் கொழும்பு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களில் ஒரு யுவதியும் 23 இளைஞர்களும் கோட்டை மாஜிஸ் திரேட் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர். மற்றைய இரு இளைஞர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் வட பகுதியைச் சேர்ந்தவர்களாவர். (ஐ)

## தவறவிடப்பட்ட பல அடையாள அட்டைகள்

### சிவில் நிர்வாக அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 24

தவறவிடப்பட்ட விசேட அடையாள அட்டைகள், தேசிய அடையாள அட்டைகள், கடவுச்சீட்டு என்பன கண்டெடுக்கப்பட்டு யாழ். சிவில் நிர்வாக அலுவகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உரியவர்கள் அடையாள அட்டைதொலைந்ததைஉதவி அரசாங்க அதிபர் மூலம் உறுதிப்படுத்திய கடிதத்துடன் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு அலுவலக நேரங்களில் வந்து பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டெடுக்கப்பட்ட விசேட அடையாள அட்டைகளின் விவரம் வருமாறு:

★ திருமதி வைத்திலிங்கம் விசாலாட்சி—பலாலி மதி. வசாவிளான்.

★ செல்வி தேவராஜா விஜயபாரதி—ஆவரங்கால் மேற்கு.

★ பரமு தேவராஜா, — ஆவரங்கால்மேற்கு, புத்தூர்.

★ பத்மநாதன் கிரிதரன்— மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தேசிய அடையாள அட்டைகளின் விவரம் வருமாறு:-

★ ஜோசபின் பிரான்ஸிஸ்—கச்சேரி நல்லூர் வீதி, அரியாலை.

★ நாகலிங்கம் சிவசுப்பிரமணியம் — குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பழை.

★ செல்வி சாந்தியோசெவ் —முல்லைத்தீவு என்பவரின் கடவுச் சீட்டு. (ஐ-4)

## தட்டெழுத்தாளர் பரீட்சையில் சித்திபெற்ற 41 பேருக்கு அழைப்பு

1995 ஆம் ஆண்டு நடைபெற்ற தட்டெழுத்தாளர் பரீட்சையில் சித்தியடைந்த 41 பேருக்கு கொழும்பிலுள்ள பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சில் அடுத்த மாதம் 2 ஆம் திகதி நேர்முகப் பரீட்சை நடைபெற உள்ளது.

இது தொடர்பான விவரங்கள் யாழ். செயலகத்துக்கு கிடைத்துள்ளதாக செயலக நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்டவர்களுக்கான கடிதங்கள் நேற்றே அனுப்பி வைக்கப்பட்டன என்றும் -

இது தொடர்பாக மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் யாழ் செயலகத்தில் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

வலி. கிழக்கு பிரதேசசபை உறுப்பினர்களும், உப அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் எதிர்வரும் 28 ஆம் திகதி நீர்வேலி மாசிவன் மயானத்தில் சிரமதானம் ஒன்றை மேற்கொள்ள உள்ளனர்.

வலி. கிழக்கு பிரதேசசபை செயலாளர் தலைமையில் இந்த சிரமதானம் நடைபெறும். (ஐ-5)

## வன்னியில் இருந்து வந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

வன்னிப் பகுதியில் இருந்து தமது சொந்த இடத்திற்கு மீளக்குடியேற குருநகர் ஊடாக யாழ்ப்பாணம் வந்த வயோதிபப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் மரணமானார்.

யாழ். கடலேரி ஊடாக வாடகைப் படகுமூலம் யாழ் குருநகர் கரையை அடைந்து சிநோர் முகாமிற்கு சென்ற வேளையே திடீரென வீழ்ந்த இவர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீர்வேலியைச் சேர்ந்த சோமன் செல்லம் (வயது60) என்ற வயோதிபப்பெண்ணே உயிரிழந்தவராவார். (ஐ-15)

## சேவை நிறைவுச் சிறப்பு மலர்


(5 ஆம் பக்கத்தொடர்ச்சி)

றது. மரபிலும் நவீனத்திலும் காலூன்றிய லோகதாசன் பாடசாலைச் சமூகத்தின் உறவுக்கு உரமிட்டு, இப் பாடசாலைச் சமூக ஒற்றுமைக்கு உயிரோட்டம் கொடுத்திருக்கிறார். லோகதாசன் அவர்கள் அதிபராக வருவதற்குமுன் இப் பாடசாலை இருந்த நிலைமையை அறிந்தவர்களுக்குத்தான் இவ்வுண்மை புலப்படும்.

ஒட்டுமொத்தமாகக் கூற வேண்டுமானால் கல்விச் செயற்பாடு இடம்பெறவல்ல ஒரு சூழலை ஏற்படுத்தியுள்ளார் என்று சொல்லலாம். அவரின் சேவையினை இப் பாடசாலைச் சமூகம் என்றும் மறக்க முடியாது.

அன்னார் நீடூழி வாழ்ந்து இப்பாடசாலைக்கு மேலும் தனது பங்களிப்பினை வழங்குவதோடு இந்நாட்டுக்கும் நல்லபணியாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### சுப்பிரமணியம் விநாயகரெட்னம்

தோற்றம்: 27 - 12 - 1939

மறைவு: 24 - 06 - 1997

பாசத்தின் திருவுருவாய்
பண்பின் உறைவிடமாய்
அன்புநெறி காட்டி எம்மை
அரவணைத்த தெய்வமே!
பாதி வழியில் எம்மைப் பரிதவிக்கவிட்டு
விண்ணுலகம் சென்றனையோ?
வற்றாத கண்ணீருடன்
நாம் இங்கு வாடுகிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய திருவெண்காட்டு சித்தி விநாயகனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

65, அரசடி றோட்,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

இராமநாதன் கல்லூரியின்
பிரதி அதிபர் திருமதி ப. பத்மநாதன்
அவர்களின் அன்பு மகன்

### ப. முரளிக்குமார் அவர்கள்

நோர்வேயில் அகாலமரணமானதையிட்டு, பிரிவால்துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவிகள் சங்கம்.

இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

(சி-1181)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.

# கேள்வி அறிவித்தல்

### அச்சுவேலி பொதுச் சந்தையில் கட்டப்பட்டுள்ள 12 ஆம், 13 ஆம் இலக்க கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை.

01. அச்சுவேலி பொதுச் சந்தையில் கட்டப்பட்டுள்ள 14 கடைகளில் 12 ஆம், 13 ஆம் இலக்க கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து **11 - 08 - 1997** ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.
02. கேள்விப் பத்திரங்கள் **07-08-1997** ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 250/-ம், மீளளிப்புச் செய்யப்படும். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 5000/- உம் செலுத்துபவர்களுக்கே வழங்கப்படும்.
03. நிரப்பப்பட்ட கேள்விகள் குறிக்கப்பட்ட தினத்தன்றோ, அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக 'விசேட ஆணையாளர், வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி' என முகவரியிடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கடைகளுக்கான கேள்வி'' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது இச் சபையின் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடப்படுதல் வேண்டும். இதன் ஒரு பிரதியை அதே தினத்தில் கிடைக்கக் கூடியதாக ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், 18, செட்டித்தெரு, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
04. தற்போது இப்பிரதேச சபையின் கடைகளில் ஏதாவது ஒன்றின் பதிவு செய்யப்பட்ட வாடகைக்காரராக இருப்பவருக்கோ அல்லது அன்னாரது கணவன் / மனைவி அவரின் குடும்பத்தவர் எவருக்கேனும், கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது.
05. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் சபையினால் அங்கீகரிக்கப்படும் முறையிலான கதவுகளைத் தங்களது செலவில் தயாரித்துப் பொருத்துதல் வேண்டும்.
06. கடைகளைத் தெரிவு செய்யும் முன்னுரிமை கூடிய கேள்வி அடிப்படையில் வழங்கப்படும்.
07. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்கடையைப் பொறுப்பேற்காதுவிடின் அவரது கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
08. ஒருவர் ஒரு கேள்விக்கு மேல் சமர்ப்பிக்க முடியாது.
09. மேற்படி கடைகளில் கீழ்வரும் வியாபாரங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.
    (அ) தேநீர்க்கடை / சாப்பாட்டுக்கடை
    (ஆ) மீன் / இறைச்சி / கருவாடு / இறால்/மரக்கறி வகை விற்பனை செய்தல்.
10. தெரிவு செய்யப்பட்ட கடையின் வாடகைக்காரர் தனது கடையை வேறெவருக்கும் கைபரிமாறலாகாது. அப்படி கைபரிமாறியது நிரூபிக்கப்படுமிடத்து உரிமை நீக்கப்படுவதுடன் வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
11. கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ சபைக்கு பூரண அதிகாரமுண்டு.
12. ஒவ்வொரு கடையின் ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா 40,000/- இக்கு குறையாது இருக்க வேண்டும்.
13. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செல்லையா குகதாசன்,
செயலாளர்,
வலி. கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி.

வலி - கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி,
22 - 07 - 1997

(சி-1180)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### வெற்றியே ஒரே நோக்கம்

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பொது மன்னிப்புக் காலம் எதிர்வரும் சனிக்கிழமை வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

தப்பிச் சென்றவர்களில் பலர் மீண்டும் வந்து இராணுவத்தில் இணைந்து கொண்டிருப்பதால் அவர்களுக்கு மேலும் சந்தர்ப்பம் அளிக்கும் விதத்தில் பொது மன்னிப்புக் காலம் நீடிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் காரணம் கூறுகிறது.

ஆனால் தப்பிச் சென்ற படையினர் மீண்டும் வந்து சேருவதற்கு அவகாசம வழங்கப்பட்டது இது முதல் தடவை அல்ல. இப்படி எத்தனையோ சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுவிட்டன.

உருப்படியான பலன் கிடைக்கவில்லை.

தப்பிச் சென்றவர்களுக்கு இனி மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது, அவர்கள் இராணுவ நீதிமன்றம் முன் விசாரணைக்கு நிறுத்தப்படுவர் என்றும் அரசு ஒரு தடவை அச்சுறுத்திப் பார்த்தது.

இப்படியானவர்கள் திரும்பி வருவதற்கு தற்பொழுது மீண்டும் அவகாசம் வழங்கப்பட்டு பொது மன்னிப்புக்காலமும் நீடிக்கப்பட்டிருப்பது அரசின் இராணுவ நீதிமன்ற விசாரணை அச்சுறுத்தலும் பயன் அளிக்கவில்லை என்பதையே காட்டுகிறது.

தற்போதைய யுத்தத்தில் அரசாங்கம் திட்டமிட்டவாறு தனது இலக்கை அடைய முடியாதிருப்பதற்கு முக்கிய காரணம் ஆயுதப் படைகள் எதிர்நோக்கும் ஆள் பற்றாக்குறையே என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனை நிவர்த்தி செய்வதற்கு புதிதாக ஆள்களைச் சேர்ப்பதே முதலாவது வழி.

ஆனால் பல தடவைகள் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டும், இராணுவத்தில் சேருவதற்கான கல்வித் தகமைகள் குறைக்கப்பட்டும் போதுமான ஆள்கள் இராணுவத்தில் சேரவில்லை. யுத்தத்தில் இறக்கநேரிடலாம் என்ற பீதியே காரணம்.

தற்பொழுதுள்ள அடுத்த வழியாக ஏற்கனவே இராணுவத்தை விட்டுச் சென்றவர்களை மீண்டும் சேர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்படியானவர்களில் பலர் ஆயுதங்களுடன் தலைமறைவாகி இருப்பதால் நாட்டில் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. கைக்கூலிகளாகவும் இவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

இவர்களை இராணுவத்துக்குள் மீண்டும் இழுப்பது மூலம் இராணுவத்தில் உள்ள ஆள்பற்றாக் குறையை தீர்ப்பதுடன் தற்போது நாட்டில் இடம்பெற்று வரும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கலாம் என்று அரசாங்கம் கருதுகிறது.

ஆனால் இன்னொரு விடயத்தை அரசு மறந்துவிட்டது போலும்.

இப்படியானவர்களை மீண்டும் உள்வாங்கும்போது இராணுவத்துக்குள் ஏற்படக்கூடிய ஒழுக்கச் சீர்குலைவுகளை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

எப்படியாவது யுத்தத்தில் வெற்றி பெற்றால்போதும் என்ற நிலைப்பாட்டின் விளைவே இது என்பதில் சந்தேகம் இல்லை.

---

இருவர் கொல்லப்பட்டதை அடுத்து

# கிழக்கு எம். பிக்களின் பாதுகாப்பு அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 24

இரு எம். பிக்கள் கொல்லப்பட்டதை அடுத்து கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இது பற்றி ஆராய்வதற்கான விசேட கூட்டம் ஒன்று நேற்று நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் சபாநாயகர் கே. பி. இரட்நாயக்க தலைமையில் நடந்தது.

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்கள், பதில் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, பாதுகாப்புப் படைப் பிரிவுகளின் தளபதிகள், பொலீஸ் மா அதிபர் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள் குறித்து இவர்கள் நீண்ட நேரம் ஆராய்ந்தனர்.

(இ-3)

### மஹ்ரூப்பின் மரண விசாரணை

திருகோணமலை, ஜூலை 24

படுகொலை செய்யப்பட்ட திருகோணமலை மாவட்ட ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப்பின் மரண விசாரணை நாளை திருகோணமலை நீதிவான் முன் இடம்பெறவிருக்கிறது.

(இ-3-150)

### நினைவுப் பேருரை

திருநெல்வேலி, ஜூலை 24

கலையரசு சொர்ணலிங்கத்தின் 15 ஆவது ஆண்டு நினைவு தினம் நாளை மறுதினம் சனிக்கிழமையன்று மானிப்பாய் மறுமலர்ச்சி மன்ற கட்டடத்தில் அ. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு விரிவுரையாளர் செல்வி இராசதுரை ஜெயரஞ்சினி கலையரசு சொர்ணலிங்கத்தின் நினைவுப் பேருரையை ''அரங்கமும் சமூகமும்'' என்ற தலைப்பில் வழங்குவார்.

(ஐ-135)

## ஜனாதிபதிக்கு புதிய மாளிகை கட்டும் வேலைகள் நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 24

கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதியின் புதிய உத்தியோக பூர்வவாசஸ்தலத்தின் நிர்மாண வேலைகளை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

இத்திட்டம் சம்பந்தமாக பல்வேறு பிரிவினரும் முன்வைத்துள்ள விடயங்களை ஆராயும் பொருட்டு ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அதேசமயம் வீடமைப்பு, நகர அபிவிருத்தி அமைச்சர் இந்திக குணவர்த்தன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவிக்கையில் நாட்டின் தலைநகரை கோட்டே ஜெயவர்த்தனபுரவுக்கு மாற்றும் நடவடிக்கையின் ஓர் அங்கமே இது என்று கூறினார்.

(இ-3)

## தனிநீதிமன்றம் அமைக்கும் முயற்சி பயன் எதனையும் தரமாட்டாது

### அமைச்சர் பீரிஸுக்கு குமார் பொன்னம்பலம் கடிதம்

கொழும்பு, ஜூலை 24

''பயங்கரவாதக் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதானோரை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்கும் முயற்சியால் பயன் எதுவும் கிடைக்காது.''

இப்படி தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் நீதி, அரச அமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

''பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதானவர்கள் தொடர்பான வழக்குகள் தற்சமயம் 6 மேல் நீதிமன்றங்களில் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் தனி நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டால் வழக்குகள் தாமதமாகவே நடைபெறும்.

சர்வதேச ரீதியில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பிரபல்யம் பெற்ற ஒரு சட்டமாகும்.

இந் நிலையில் இச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்படுவோருக்கு இந்த நீதிமன்றம் உதவப்போவதில்லை.

இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(இ-3-150)

### ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை அனுமதி அட்டைகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 24

அடுத்த மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜீ. சீ. ஈ. உயர் தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பல் மூலம் நேற்று இங்கு எடுத்து வரப்பட்டன.

பாடசாலைகள் மூலம் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பாடசாலைகளுக்கும் —

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலமும் - நேற்றே அனுப்பிவைக்கப்பட்டன.

இதே வேளை — பரீட்சைக்குத் தேவையான காகிதாதிகள், விடைத்தாள்கள் போன்றனவும் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-5)

### நெடுந்தீவுக்கு மா விநியோகம்

நெடுந்தீவு ஜூலை 24

நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம் தேவையான அளவு மாவை யாழ். நகரில் இருந்து எடுத்துச் சென்றதைத் தொடர்ந்து நெடுந்தீவில் மாவுக்கான தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

(ஐ-111)

## எதிர்காலத்தின் ஸ்திரத்தன்மைக்கு திட்டமிட்ட கல்வி முறை அவசியம்

### பயிற்சி நெறி தொடக்க விழாவில் உரை

நெடுந்தீவு, ஜூலை 24

தமது எதிர்கால ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் இளைய தலைமுறையினர் உலக வளர்ச்சியுடன் இணைந்து செல்லக் கூடியதான கல்வியில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

கனடா வாழ் நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தின் அனுசரணையுடன் நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் ஆரம்பித்துள்ள இலவச கல்விப் பயிற்சி நெறிகளின் தொடக்க விழாவில் பேசிய நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபர் திருமதி பி. எம். ஜே. அன்ரனி மேற்கண்டவாறு கூறினார்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் சி. அருளப்பு தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் திருமதி அன்ரனி தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:

உலகம் துரித வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. நாமும் அதனுடன் இணைந்து கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாதது. ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் போன்றவற்றில் தேர்ச்சியும் ஆற்றலும் கொண்டிருந்தால் மட்டுமே உலகத்துடன் ஒன்றிச் சென்று பலதுறைகளின் வளர்ச்சியிலும் பங்கு கொள்ள முடியும். இதை மாணவர்கள் நன்கு தெரிந்து கொண்டு கிடைக்கும் இலவச பயிற்சி நெறிகளின் ஊடாக கல்வியில் தேர்ச்சி பெற்று விளங்க வேண்டும் — என்றார்.

தலைமை உரையாற்றிய உதவி அரச அதிபர் சி. அருளப்பு கூறியதாவது:

இன்றுபெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகப் பல தரப்பட்ட கஷ்டங்களின் மத்தியிலும் பெருந் தொகைப் பணத்தைச் செலவிடுகிறார்கள். நெடுந்தீவு மாணவர்களுக்கு [illegible] இலவசமாக ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் பயிற்சிகள் வழங்க மக்கள் ஒன்றியம் முன்வந்துள்ளது மகிழ்ச்சிக்குரியது. மாணவர்கள் இதனை நன்குபயன்படுத்த வேண்டும்— என்றார்.

நெடுந்தீவு கோட்டகல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன் பேசும் போது —

தங்களின் ஆற்றலைப்பயன்படுத்தி நெடுந்தீவின் வளர்ச்சிக்கு இங்குள்ள மாணவர்கள் பயனுள்ள பணிகளை வழங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் கனடாவில் உள்ள உங்கள் உடன் பிறப்புக்கள் இந்த இலவச பயிற்சி நெறிகளை வழங்கி உதவுகின்றனர். அவர்களின் எண்ணங்கள் மதிக்கப்பட வேண்டும்; மாணவர்கள் இதை மறக்கக் கூடாது — என்றார்.

வைத்திய அதிகாரி வை. யோகேஸ்வரன், புலவர் அ. வெ. அரியநாயகம் ஆகியோரும் உரையாற்றினர்.

### கடல்அட்டை பிடிப்போர் கைது

கடலட்டை பிடிப்பதற்காக புங்குடுதீவு கடற் பிராந்தியத்துக்குச் சென்ற குருநகரைச் சேர்ந்த 10 மீனவர்கள் நேற்று முன்தினம் படையினரால் பிடிக்கப்பட்டனர்.

இவர்கள் பின்னர் ஊர்காவற்றுறைப் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

ஊர்காவற்றுறைப் பொலீஸார் இவர்களை நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

நீதிவான் எஸ். ஏ. ஏகநாதன் 10பேரையும் பிணையில் செல்ல அனுமதித்தார்.

(இ-15)

### குப்பைகள் தேக்கம்

நல்லூர் சங்கிலியன் வீதியில் யாழ். மாநகர சபையின் கழிவுகள் கொட்டும் திரையை அண்மித்த பகுதியில் குப்பைகள்நீண்ட நாள்களாக அப்புறப்படுத்தப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன.

சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தினமும் இப்பகுதியில் வந்து செல்கின்றனர். எனினும் தேங்கிக் கிடக்கும் குப்பைகள் அகற்றப்படாமல் குவிந்து கிடக்கின்றது என இப்பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(ஐ-103)

### கூட்டுறவு பரிசோதகர் பொதுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 24

கூட்டுறவு பரிசோதகர் பொதுப் பரீட்சையில் சித்தியடைந்து திருகோணமலைக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு ஒரு மாத காலத்தில் யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் என்று வடக்கு — கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த 22 ஆம், 23 ஆம் திகதி திருகோணமலையில் நடந்த நேர்முகப் பரீட்சைக்கு போக்குவரத்து பிரச்சினை காரணமாக இவர்கள் சமுகமளிக்க முடியாது போயிற்று.

(இ-3)

### நாளை

ஆடி 09

வெள்ளிக்கிழமை

திதி: ஷஷ்டி

முன் இரவு 8.08 வரை.

நட்சத்திரம்: உத்திரட்டாதி பிற்பகல் 1.21 வரை.

சுபநேரம்: 6.02-7.32

ராகுகாலம்: 10.32-12.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரடிப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் யாழ். நகரில்

ஜெயா அழகு மாடம் மீண்டும் யாழ். நகரில்
இல. 127 கஸ்தூரியார் வீதியில்

தனது சில்லறை/மொத்த வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்கள் என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**ஜெயா அழகு மாடம்**
இல. 127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(48491)

# மரண அறிவித்தல்கள்

## டாக்டர்
## சோமசுந்தரம் சிவராமலிங்கம்

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட டாக்டர் சோமசுந்தரம் சிவராமலிங்கம் அவர்கள் 22-7-97இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சோமசுந்தரம் இராசம்மா தம்பதிகளின் ஏகபுதல்வரும், சின்னத்தம்பி கனகலட்சுமி தம்பதிகளின் அருமை மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும், கலைமதி (ஆஸ்திரேலியா) டாக்டர் கலைச்செல்வி (ஆஸ்திரேலியா), கலைராஜி (சிங்கப்பூர்), கலைவாணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலச்சந்திரன் (கணக்காளர்), டாக்டர் ரவீந்திரன் நகுலேஸ்வரன் (கணனிப் பொறியியலாளர்), விஜயகுமார் (கணக்காளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான திருமதி வாலாம்பிகை மகேந்திரா, திருமதி லலிதாம்பிகை முருகையா மற்றும் திருமதி திலகாம்பிகை யோகீஸ்வரன் (ஓய்வு பெற்ற ஆசிரியை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் அருமைச் சகோதரனும், மார்க்கண்டன் (யாழ்—அஞ்சலகம்), சிவானந்தன் (கலால் திணைக்களம் — மட்டக்களப்பு), விஜயகுமார் (தேயிலைத் தொழிற்சாலைப் பொறுப்பாளர், இரத்தினபுரி), நகுலேந்திரன் (கணக்காளர், லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 5, இராமகிருஷ்ண ரெறஸ், வெள்ளவத்தை இல்லத்திலிருந்து இன்று 24-07-97 வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டுக் கல்கிசை இந்து மயானத்தில் பிற்பகல் 2 மணிக்குத் தகனஞ் செய்யப்படும்.

தகவல்:
சி. மார்க்கண்டன்
(மைத்துனர்)
457, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(48558)

## மயில்வாகனம் முருகதாஸ்
(உரிமையாளர்: யு. எஸ். ஏ. ரேடிங், கொழும்பு)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் முருகதாஸ் 23-07-97 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற என். கே. மயில்வாகனம்—கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சுமதியின் அன்புக் கணவரும், ஸ்ரீகௌதமன், கௌசிகன், ஹரிணி, பிரகாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24-07-97 வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
கோ. கிருஸ்ணபிள்ளை
கோ. சிவானந்தன்
(மைத்துனர்)
95, புதுச்செட்டித்தெரு,
கொழும்பு.
(48559)

## குட்டிததம்பி கனகசபை
(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், இடைக்காட்டை வதிவிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி கனகசபை 23-07-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குட்டித்தம்பி—சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னையா சிவகாமி தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஸ்ரீவடிவேல் (சுவீடன்), சுதாகரன் (இந்தியா), கோமளா (ஆசிரியை, புத்தூர், நவக்கிரி அ. மி. பாடசாலை), பிறேமளா (யாழ். பல்கலைக்கழகம் புவியியல் இறுதி வருட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கார்த்திகேசு (பிரபல வர்த்தகர்), சதாசிவம் (ஒப்பந்தகாரர்), காலஞ்சென்ற பூமணி, காலஞ்சென்ற கந்தசாமி (Navy), சுப்பையா (C T B ), சின்னத்தம்பி (Doctor, U S A ) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரவணபவான் (Tamil translator), திருமதி சத்தியபாமா இராசலிங்கம் (Legal draughtsman), திருமதி சேதீஸ்வரி சிவானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-07-97) வியாழக்கிழமை 2-00 மணியளவில் நீர்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
கந்தசாமி கோயிலடி,
நீர்வேலி வடக்கு.
(48553)

### கோணேசர்...
(முதலாம் பக்கத் தொடர்)

பாடுகளின்படி சட்டவிரோதமானது'' என்று நீதிவானிடம் சுட்டிக்காட்டினார்.

இதை ஏற்றுக்கொண்ட நீதிவான் இருவரையும் 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

திருகோணமலையை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட இருவர் 5 ஆயிரம் ரூபா சரீரப்பிணை வழங்க வேண்டும் என்றும்—

சந்தேக நபர்கள் ஒவ்வொருமாதமும் முதல் சனிக்கிழமை திருகோணமலைப் பொலீஸ் தலைமையகத்தில் கையொப்பம் இடவேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய திருகோணமலைப் பொலீஸாருக்கு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி வரை அவகாசம் வழங்குவதாகவும் நீதிவான் தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் மீதான குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்காக வழக்கின் சகல ஆவணங்களும் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும்—

இன்னும் அங்கிருந்து குற்றப்பத்திரிகை குறித்த பணிப்பு வரவில்லை என்றும் —பொலீஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி ஏ. டபிள்யூ அப்துல் சத்தாரின் அனுசரணையுடன் எம். எஸ் எம். மதார் ஆஜராகியிருந்தார்.

(இ-3-150)

### ஆஸி...
(முதலாம் பக்கத் தொடர்)

போன்ற விடயங்கள் பற்றி அவர்கள் பேசினர்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் உத்தியோக பூர்வ அழைப்பை ஏற்று டவ்னர் கொழும்பு வந்துள்ளார்.

அவர் இங்கு மூன்று தினங்கள் தங்கி இருக்க ஏற்பாடாகி உள்ளது.

இங்கு தங்கி இருக்கும் நாள்களில் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இருந்து வரும்முட்டுக்கட்டையை நீக்குவது குறித்து அவர் ஆராய்வார். அதன் ஓர் அங்கமே தமிழ்க் கட்சிகளுடனான இன்றைய சந்திப்பு ஆகும்.

(இ-3-150)

### யால சரணாலயப்...
(முதலாம் பக்கத் தொடர்)

வெளியிடுகையில், இச் சம்பவத்தை யார் செய்தார்கள் என்பது குறித்து தகவல் கிடைக்காத போது அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டியது அவசியம். அங்கிருந்து அகற்றப்பட்ட இராணுவ முகாம் மீள அமைக்கப்பட வேண்டும் — என்றார்.

(இ-3-21)

### விமானிகள்...
(முதலாம் பக்கத் தொடர்)

பிரிவு பிரதேச செயலாளர் வேலும்மயிலும் நேற்றிரவு தெரிவித்தார். (இ-3)

### குடாநாட்டில்...
(முதலாம் பக்கத் தொடர்)

தல், கப்பல் கடத்தல் ஆகியவற்றின் மூலம் புலிகள் இயக்கத்தினர் அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை உயர்வை ஏற்படுத்தவும் படையினர் மீது பழியைப் போடவும் முயற்சிக்கிறார்கள்.

இந்தச் சம்பவங்களைக் காட்டி மண்ணெண்ணெய் விலையை அதிகரித்து யாழ். மக்களுக்கு கஷ்டங்களை ஏற்படுத்த வேண்டாம் என்று வியாபாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

இதுபோன்ற நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் சந்தர்ப்பவாதிகள் என்றும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# இந்திய கடற்படையினரிடம் 43 தமிழ் அகதிகள் சிக்கினர்
## படகோட்டிகளும் கைது!

சென்னை, ஜூலை 24

இலங்கையில் இருந்து ஒரு படகில் வந்து கொண்டிருந்த 43 தமிழ் அகதிகள் இந்திய கடற்படையினரிடம் சிக்கினர்.

தனுஷ்கோடி கள்ளுக்கரைக்கு அப்பால் அடம்ஸ் பாலம் அருகே இந்தியக் கடற்படையினர் இவர்களை வழிமறித்துப் பிடித்தனர்.

பிடிபட்ட இவர்கள் தற்போது மண்டபம் அகதி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் அருகேயுள்ள இலுப்பைக்கடவை என்ற இடத்தைச் சேர்ந்தவர்கள் என்று தமிழ்நாடு காவல் துறையினர் தெரிவித்தனர்.

அவர்கள் வந்த படகு பறிமுதல் செய்யப்பட்டு படகோட்டிகள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-3)

## வங்கிகளுக்கு அலையும் ஓய்வூதியர்

ஜூலை மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் வந்து இரண்டு வாரங்களாகியும் அதற்குரிய காசோலை, அட்டவணை, ஆகியவை இன்னமும் வங்கிகளுக்கு வராததால் தினமும் வங்கிகளுக்கு அலையும் அவல நிலை உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு ஏற்பட்டுள்ளது. (இ117)

Centre for English Language and
**COMPUTER STUDIES**

வெளிநாட்டில் கல்வி கற்க உள்ளோர்,
பல்கலைக்கழக புகுமுக மாணவர்,
பாடசாலை விட்டு விலகியோர்
ஆங்கிலத்தில் சிறந்த தகைமை பெற

() CERTIFICATE Course in English
(6 மாதம்)

() TOEFL மாலை நேர வகுப்புக்கள்
ஆரம்பம்: 01-08-97 பி.ப. 3.30 மணி
30 - 07 - 97 ஆம் திகதிக்கு முன் பதிவு செய்க.

Managing Director
CELCE
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
(48545)

## வியாபாரிகள் கவனத்துக்கு

குளிர்சாதனப் பெட்டிகளுக்குத் தேவையான காஸ்சிலிண்டர், பிளாஸ்டிக் வகைகள், கல்வனைஸ் வாளி, கடித உறைகள், நெற் Bag, தடிகள், இந்தியன் ஊதுபத்தி வகைகள், ஐஸ்பழத் தடி, ஐஸ்கோண் ஆகியவை பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்:-

**நியூ நாதன் ரேடர்ஸ்**
213, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(48554)

## யாழ். பல்கலைக்கழக வணிகமாணவ மன்றத்தினரின்

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

23 — 07 — 1997 புதன் பிற்பகல் 3 மணிக்கு நகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்ற அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் பின்வரும் சீட்டுக்கள் பரிசுக்கு உரியவையாக தெரிவு செய்யப்பட்டன.

1 ஆம் பரிசு இல: 14577
2 ஆம் பரிசு இல: 14664
3 ஆம் பரிசு இல: 12086

ஆறுதல் பரிசுகள்:

1. 02622 2. 03240 3. 06705 4. 07603
5. 08176 6. 09563 7. 10943 8. 16367
9. 17480 10. 18688

மேற்படி பரிசுகளைப் பெறும் அதிர்ஷ்ட சாலிகள் எதிர்வரும் 11 — 08 — 1997 ஆம் திகதிக்கு முன்னர் வணிகத்துறையில் அமைந்துள்ள வணிகமாணவ மன்றத்துடன் தொடர்பு கொண்டு பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

(48552) - நிர்வாகக்குழு

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24-07-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org